# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

பாடம் 6

## அர்த்தத்தை கண்டுபிடித்தல்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

வழிகாட்டிகள் ........ 2

எழுத்தாளர் ........ 5

ஆவணம் ........ 7

வாசகர்கள் ........ 10

ஒன்றையொன்று சார்ந்திருத்தல் ........ 14

சுருக்க பகுதிகள் ........ 19

பாதையின் சிக்கலான தன்மை ........ 20

வியாக்கியான அறிஞரின் தனித்துவம் ........ 24

வாசகர்களின் தேவைகள் ........ 27

முடிவுரை ........ 30

# முன்னுரை

குழந்தைகள் பொதுவாக தங்கள் ஆசிரியர்கள் தங்களுக்காக எவ்வளவு செய்கிறார்கள் என்பதைப் பாராட்டமாட்டார்கள். அவர்களுடைய ஆசிரியர்கள் அவர்களுக்கு அனைத்து வகையான புதிய கண்டுபிடிப்புகளையும் வழங்க கடினமாக உழைக்கிறார்கள். ஆனால், பெரும்பாலும், இளம் மாணவர்கள் முணுமுணுப்பதைத் தவிர வேறு எதையும் செய்வதில்லை, எல்லாவற்றையும் குறை கூறுகிறார்கள். பெரியவர்களாக இருக்கிற நாம் நம்முடைய குழந்தை பருவ ஆசிரியர்களைத் திரும்பிப் பார்க்கிறோம், நமது பாடங்களை நாமாகவே கற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்பது எவ்வளவு நல்லது என்பதை நாம் புரிந்துகொண்டோம். அவர்கள் நமக்காக செய்த அனைத்திற்கும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ஆனால் நீங்கள் அதைப் பற்றி சிந்திக்கும்போது, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் கற்றுக்கொள்ள நமது குழந்தை பருவ பாடங்கள் நமக்கு வழங்கிய எண்ணற்ற வாய்ப்புகளுக்கு நாம் இன்னும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். வேதாகமத்தின் அர்த்தம் என்று வரும்போது பல வழிகளில் அது அப்படித்தான் இருக்கிறது. வேதாகமத்தின் அர்த்தத்தை நாமே கண்டுபிடிக்க தேவன் நம்மை விட்டுவைக்கவில்லை. அவர் நமக்கு உதவ வழிகாட்டிகளை வழங்கினார். ஆனால் இதை விட, வேதாகமத்தைப் பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க விஷயங்களில் ஒன்று என்னவென்றால், நாம் நம் வாழ்க்கையைக் கடந்து செல்லும்போது, நாம் மீண்டும் மீண்டும் வேதத்திற்குத் திரும்பி, அதன் அர்த்தத்தைப் பற்றி எப்போதும் கற்றுக்கொள்ளலாம்.

இது *அவர் நமக்கு வேதம் கொடுத்தார்: வியாக்கியானம் செய்வதன் அடிப்படைகள்* என்கிற தொடரில் இது ஆறாவது பாடமாக்கும். இதற்கு *"அர்த்தத்தை கண்டுபிடித்தல்"* என்று பெயரிட்டுள்ளோம். இந்தப் பாடத்தில், வேதாகமத்தின் அசல் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க உதவும் வியாக்கியான உத்திகளில் நாம் கவனம் செலுத்துவோம்.

வேதத்தில் அர்த்தத்தைக் கண்டுபிடிக்கும் செயல்முறைக்கு எண்ணற்ற காரணிகள் பங்களிக்கின்றன. ஆனால் நமது நோக்கங்களுக்காக, நாம் இரண்டில் மட்டுமே கவனம் செலுத்துவோம். முதலில், ஒரு வேத பகுதியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த உதவும் சில முக்கியமான வழிகாட்டிகளைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, அந்த அர்த்தத்தின் பல சுருக்கங்களை

உருவாக்குவதன் மதிப்பைக் காண்போம். வேதாகமத்தின் அர்த்தத்தை நோக்கி நம்மைச் சுட்டிக்காட்டும் வழிகாட்டிகளைப் பார்ப்பதன் மூலம் தொடங்குவோம்.

# வழிகாட்டிகள்

இன்றைய பெரும்பாலான சுவிசேஷக சபையார் தங்கள் பொதுவான வியாக்கியான உத்தியை இலக்கண-வரலாற்று முறை என்று குறிப்பிடுகின்றனர் என்று முந்தைய பாடத்தில் குறிப்பிட்டிருந்தோம். இப்போது, இந்த சொற்பதம் ஒப்பீட்டளவில் சமீபத்தியது, ஆனால் இது சபை வரலாறு முழுவதும், குறிப்பாக சீர்திருத்த காலத்திலிருந்து காணக்கூடிய ஒரு அணுகுமுறையைக் குறிக்கிறது. உண்மையில், இலக்கண-வரலாற்று முறையானது வேதாகமத்தின் இலக்கணத்தின் அடிப்படையில், அதாவது அதன் பக்கங்களில் எழுதப்பட்டவைகளின் அடிப்படையில் மற்றும் அதன் பண்டைய வரலாற்று பின்னணியின் அடிப்படையில், குறிப்பாக அதன் மனித எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களின் சூழலின் அடிப்படையில் வேதாகமத்தின் அர்த்தத்தைக் கண்டறிய முயல்கிறது. இந்த இலக்கண மற்றும் வரலாற்று காரணிகள் வேதத்தின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கான வழிகாட்டிகளாக செயல்படுகின்றன.

இந்த பாடத்தில், வேதாகமத்தில் ஒரு வேத பகுதியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த உதவும் மூன்று முக்கிய வழிகாட்டிகளான வேத பகுதியின் எழுத்தாளர், ஆவணம் மற்றும் வேத பகுதி எழுதப்பட்ட அசல் வாசகர்கள் போன்றவற்றில் நாம் கவனம் செலுத்துவோம்.

பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் எழுத்தாளரை ஏவிய போது, அவர் எழுத்தாளர்களின் திறமைகள் மற்றும் ஆளுமைகள் மூலம் பணியாற்றினார். எனவே, எழுத்தாளர்களைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்வது அவர்கள் எழுதிய விஷயங்களைப் புரிந்துகொள்ள உதவும்.

பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு புத்தகத்தையும் ஒரு ஒருங்கிணைந்த முழுமையாக வடிவமைத்தார், ஒவ்வொரு பகுதியும் அதன் சொந்த இலக்கண மற்றும் இலக்கிய சூழலில் புரிந்து கொள்ள போதுமான எழுத்துப்பூர்வ உள்ளடக்கத்தை வழங்கினார். எனவே, அதன் அனைத்துப் பகுதிகளையும் வியாக்கியானம் செய்ய வேண்டிய இலக்கியச் சூழலைக் கொண்டிருப்பதால், அந்த ஆவணமே நமது வியாக்கியானத்தை வழிநடத்த முடியும்.

ஆவியானவர் தாம் ஏவிய புத்தகங்கள் அவர்களின் அசல் வாசகர்களுக்கு அர்த்தமுள்ளதாகவும், அவர்களின் வாழ்க்கைக்கு பொருத்தமானதாகவும் இருப்பதை உறுதி செய்தார். எனவே, வேதாகமத்தின்

அசல் வாசகர்களின் அடையாளங்களையும் வாழ்க்கையையும் ஆராய்வதன் மூலம் அதன் அர்த்தத்தைப் பற்றி நாம் சிலவற்றைக் கற்றுக்கொள்ளலாம்.

ஒரு உணவகத்தில் ஒரு நபர் தரையில் வீசப்பட்ட ஒரு குறிப்பைக் கண்டுபிடிப்பதை கற்பனை செய்து பாருங்கள். ”உதவி!” என்கிற ஒரே ஒரு வார்த்தை மட்டுமே அந்த குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. மேஜையில் இருந்த தனது நண்பர்களிடம் அந்த குறிப்பைக் காட்டி, அவர்களில் யாரேனும் அதன் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியுமா என்று பார்க்கிறார். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ”இன்னும் கொஞ்சம் வார்த்தைகள் இருந்திருந்தால் கண்டுபிடிப்பது எளிது என்று நான் நினைக்கிறேன்,” என்று அந்த நபர் கூறுகிறார். ”இதை எழுதியது யார் என்று நமக்குத் தெரிந்தால்” என்று மற்றொருவர் கூறுகிறார். மற்றொரு நண்பர், ”இந்த குறிப்பு யாருக்கு எழுதப்பட்டது என்பது குறித்து ஏதாவது வழி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்” என்று குறிப்பிடுகிறார். இந்த குறிப்பு பல விஷயங்களைக் குறிக்கலாம் என்பதே உண்மையாகும். இது குழந்தைகள் மற்றொரு மேசையில் விளையாடிக் கொண்டிருந்த விளையாட்டின் ஒரு பகுதியாக இருக்கலாம். இது உணவுப்பட்டியலில் உதவிக்கான வேண்டுகோளாக இருக்கலாம். இது கடுமையான சிக்கலில் உள்ள ஒருவரிடமிருந்து வந்த ஒரு விரக்தியான அழுகையாக இருக்கலாம். மேலதிக வழிகாட்டுதல் இல்லாமல், அந்த நபரும் அவரது நண்பர்களும் குறிப்பின் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள எந்த வழியும் இல்லை.

வேதத்திற்கும் இது தான் உண்மை. அதன் ஆசிரியர்கள் மற்றும் வாசகர்களைப் பற்றி நமக்கு குறைவாகவோ அல்லது எதுவும் தெரியாதபோது, அல்லது வேத பகுதிகளின் பரந்த பின்னணியை அறியாமல் நாம் படிக்கும்போது, வேதத்தின் நோக்கம் நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் நல்ல செய்தி என்னவென்றால், எழுத்தாளர், ஆவணம் அல்லது வாசகர்களைப் பற்றி நாம் பெறும் எந்த அறிவும் வேதாகமத்தின் அர்த்தத்தைப் பற்றிய நமது புரிதலை மேம்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

> நாம் படித்துக் கொண்டிருக்கும் வேதாகமத்தின் இலக்கண, வரலாற்றுப் பின்னணியை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டால், நாம் ஏற்கனவே அனுமானித்துக்கொண்டிருக்கும் விஷயங்களின் வெளிச்சத்தில் அவற்றைத் தவிர்க்க முடியாமல் வாசிப்போம். எடுத்துக்காட்டாக, இது சிலருக்கு அபத்தமாகத் தோன்றலாம், ஆனால் இயேசு மீண்டும் பிறப்பது அல்லது மேலிருந்து பிறப்பது பற்றி பேசும்போது, அதை மறுபிறவி என்று படித்தவர்கள் உள்ளனர், அதாவது உங்களுடைய தாயின் கருப்பையில் நுழையாமல், வேறொருவரின் கருப்பையில் இரண்டாவது முறையாக நுழைதல் என்பதாக புரிந்து

கொள்ள வாய்ப்புண்டு, இப்படித்தான் நிக்கோதேமு புரிந்து கொண்டார். எனவே அதன் இலக்கண உணர்வை அல்லது இலக்கியச் சூழலை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படியானால், சில வரலாற்றுப் பின்னணியும் உதவும். எடுத்துக்காட்டாக, யூத மக்கள் மறுபிறவி எடுப்பதைப் பற்றிப் பேசும்போது, குறிப்பாக ஒரு புறஜாதி யூத மதத்திற்கு மாறியதைப் பற்றி சிந்திப்பார்கள். ஆனால் இது இஸ்ரவேலின் ஆசிரியருக்கு புரியாத ஒன்று. தேவனுடைய மக்களில் ஒரு பகுதியாகக் கூட இல்லாத ஒருவரைப் போலவே அவ**ர்** எப்படி நடத்த**ப்பட** முடியும்? ஆனால், மக்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறும் வரை அவர்கள் பிசாசின் பிள்ளைகள், எனவே ஒரு நபர் ஆவிக்குரிய மறுபிறவி எடுக்க வேண்டும் என்று இயேசு பின்னாளில் யோவான் 8-ல் கூறுவதைப் போன்ற**து**தான் இதுவாகும். இதற்கு நீங்கள் வேதம் முழுவதும் உதாரணங்களைக் காணலாம், ஏனென்றால், எல்லாவற்றிற்கும் வேதாகமத்தில் ஒரு கலாச்சார பின்னணியும் இலக்கண பின்னணியும் உள்ளன. வேதாகமம் முழுவதுமே எல்லாக் காலத்திற்கும் உரியது, ஆனால் அது உரையாற்றிய சூழ்நிலைகள், அமைப்புகளையும் நாம் அங்கீகரிக்க வேண்டும், இதன் மூலம் நாம் மற்ற அமைப்புகளுக்குப் பயன்படுத்தக்கூடிய நியமங்கள், உலகளாவிய மற்றும் நித்திய கொள்கைகளை அடையாளம் காண முடியும்.

– Dr. கிரெய்க் எஸ். கீனர்

இலக்கண அல்லது வரலாற்றுப் பின்னணியைப் பற்றிய அதிக அறிவு நவீன வாசகருக்கு வேதத்தைப் படிப்பதன் மூலம் அதிக நன்மைகளைப் பெற உதவும் என்று நாம் நம்புகிறோம். இப்போது நிச்சயமாக, வேத பகுதியைத் தவிர வேறு எந்த கூடுதல் கருவிகளும் இல்லாமல்,குறைந்த கல்வியுடன் உங்களால் வேதத்தைப் படிக்க முடியும், நமது நவீன யுகத்தில் நமக்கு கிடைக்கக்கூடிய கூடுதல் வேத கருவிகள் மற்றும் உபகரணங்கள் இல்லாமல் வேத பகுதி என்ன கூறுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள முடியும் என்பது பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும். ஆயினும்கூட, வேத பகுதிகளும் வாக்கியங்களும் ஒன்றிணைக்கப்பட்ட விதத்தைப் புரிந்துகொள்வதும், வேத

> பகுதிகள் எழுதப்பட்ட சூழலைப் புரிந்துகொள்வதும் வாசகருக்கு அதிக தெளிவையும் அதிக புரிதலையும் தரும்.
>
> – Dr. சைமன் வைபர்ட்

வேத பகுதியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த உதவும் வழிகாட்டிகளைப் பற்றிய நமது விவாதம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படும். எழுத்தாளர், ஆவணம் மற்றும் வாசகர்கள் என்கிற ஒவ்வொரு வழிகாட்டியையும் மிகவும் உன்னிப்பாகப் பார்ப்பதன் மூலம் நாம் தொடங்குவோம். அவை ஒன்றையொன்று சார்ந்திருப்பதை ஆராய்வதன் மூலம் இந்த பகுதியை நிறைவு செய்வோம். முதலில் எழுத்தாளர் வழங்கிய வழிகாட்டலைப் பார்ப்போம்.

## எழுத்தாளர்

வேதாகமத்தின் ஒரு பகுதியை எழுதிய மனிதரை நாம் பரிசீலிக்கும் போதெல்லாம், அனைத்து வகையான கேள்விகளுக்கும் பதிலளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். முதலில், அவர் யார்? என்கிற ஆசிரியரின் அடையாளத்தை அறிய விரும்புகிறோம். சில நேரங்களில், வேதாகமம் உண்மையில் பல்வேறு புத்தகங்களின் ஆசிரியரை பெயரால் அடையாளம் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, ஆமோஸ் மற்றும் ஏசாயாவின் பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் ஆமோஸ் மற்றும் ஏசாயா தீர்க்கதரிசிகளின் பெயரால் அழைக்கப்படுகின்றன. பேதுரு மற்றும் பவுலின் புதிய ஏற்பாட்டு நிருபங்கள் இந்த அப்போஸ்தலர்களை அவற்றின் ஆசிரியர்களாக வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றன. ஆனால் அதே நேரத்தில், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் நியாயாதிபதிகள் மற்றும் ராஜாக்கள், அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் எபிரெயர் போன்ற பல புத்தகங்களை யார் எழுதியது என்று தெரியாமல் உள்ளன. இந்த சந்தர்ப்பங்களில், ஆசிரியர் பற்றிய சில பொதுவான அவதானிப்புகளுக்கு நாம் பெரும்பாலும் தீர்வு காண வேண்டியிருக்கும். ஆனால் எது எப்படியிருந்தாலும், ஏதாவது ஒரு வகையில், பொதுவான வரலாற்று ஆராய்ச்சியும் வேதாகமமும் ஒவ்வொரு வேத எழுத்தாளருக்கும் ஒரு சுயவிவரத்தை உருவாக்க நமக்கு எப்போதும் உதவுகின்றன. இது போன்ற பின்வரும் கேள்விகளுக்கு நாம் எப்போதும் சில நுண்ணறிவுகளைப் பெறலாம்: தேவனுடைய மக்கள் மத்தியில் எழுத்தாளருக்கு என்ன பங்கு இருந்தது? அவரது சிறப்பு ஆர்வங்கள் என்ன? அவர் தனது புத்தகத்தில் எந்த வகையான கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளை வலியுறுத்தினார்? ஒரு வேதாகம எழுத்தாளரைப் பற்றி நமக்குத் தெரிந்த அனைத்தும் வேதாகமத்தின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கான இலக்கை நோக்கி நம்மை வழிநடத்துகின்றன.

யோவான் 3:16-ன் எழுத்தாளரை மையப்படுத்துவதன் மூலம் எழுத்தாளரைப் பற்றிய நமது அறிவு நமது வியாக்கியான முயற்சிகளில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கருத்தில் கொள்வோம். இந்த பரிச்சயமான வசனத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவா 3:16).

யோவான் சுவிசேஷமானது யாக்கோபின் சகோதரரும் செபதேயுவின் மகனுமான அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டது. யோவான் இயேசுவின் மிகவும் நம்பகமான தோழர்களின் உள் வட்டங்களில் ஒருவராகவும், ஆரம்பகால கிறிஸ்தவ சமூகத்தில் நம்பிக்கையின் தூணாகவும் இருந்தார். யோவான் சுவிசேஷத்தைத் தவிர, புதிய ஏற்பாட்டில் மேலும் நான்கு புத்தகங்களை அவர் எழுதினார்; அவையாவன: 1 யோவான், 2 யோவான், 3 யோவான், வெளிப்படுத்தின விசேஷம். அவருடைய புத்தகங்களின் மூலமும், மத்தேயு, மாற்கு, லூக்கா போன்ற பிற வேத எழுத்தாளர்களால் யோவானைப் பற்றிச் சொல்லப்பட்ட விஷயங்கள் மூலமும், யோவானின் நம்பிக்கைகளைப் பற்றியும், அந்த நம்பிக்கைகளை அவர் தனது வாசகர்களுக்குத் தெரிவித்த விதத்தைப் பற்றியும் பயனுள்ள புரிதலைப் பெறலாம். எடுத்துக்காட்டாக, யோவான் 20:31-ல், யோவான் தனது சுவிசேஷத்தை எழுதுவதற்கான தனது நோக்கத்தைக் கூறினார். அவர் தனது வாசகர்களிடம் கூறியதாவது:

> இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:31).

"இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிப்பதும், விசுவாசிப்பதன் மூலம் [அவர்கள்] அவருடைய நாமத்தினாலே ஜீவனைப் பெறுவதும்" யோவானின் முக்கிய நோக்கம் என்று இந்தப் பகுதி தெளிவுபடுத்துகிறது.

எழுத்தாளரைப் பற்றியும் அவருடைய நோக்கத்தைப் பற்றியும் நமக்கு ஓரளவு அறிவு இருக்கும்போது, யோவான் 3:16-ல் இதே இருமுனை நோக்கத்தைக் காண்பது கடினம் அல்ல.

நவீன மொழிபெயர்ப்புகளின் பெரும்பாலான ஆசிரியர்கள் யோவான் 3:15 இல் முடிவடையும் இயேசுவின் வார்த்தைகளைப் பற்றிய யோவானின் கருத்துகளின் தொடக்கமாக யோவான் 3:16 ஐ சரியாகக் கருதுகின்றனர். யோவான் 3:16 இன் முதல் பாதி, "தேவன் தம்முடைய ஒரே குமாரனைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொடுக்கும் அளவிற்கு உலகத்தை மிகவும் நேசித்தார்" என்று கூறுகிறது. இந்த வசனத்தின் இந்த பகுதி யோவான் 20:31 இன் முதல் பாதியான "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு" என்பதற்கு ஒத்திருக்கிறது. யோவான் 3:16-ன் இரண்டாம் பாதி "அவரை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனைப் பெறுவான்" என்று கூறுகிறது. இந்த வசனத்தின் இந்த பகுதி யோவான் 20:31 இன் இரண்டாம் பாதியான "விசுவாசிக்கிறபடியால் நீங்கள் அவருடைய நாமத்தினாலே ஜீவனைப் பெறுவீர்கள்" என்பதற்கு ஒத்திருக்கிறது.

இந்த ஒப்பீடுகளைக் குறிப்பிடுவது பல வியாக்கியான அறிஞர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அங்கீகரித்த ஒன்றை உறுதிப்படுத்துகிறது. யோவான் இந்த வேத பகுதியை வெறுமனே ஒரு உண்மையான வரலாற்று அறிக்கையாக மட்டுமே கருதினார். தேவன் தம்முடைய தனித்துவமான குமாரனாகிய இயேசுவைக் கொடுத்தார் என்ற வரலாற்று உண்மை யோவானுக்கு முக்கியமானது, ஆனால் அதை இங்கே குறிப்பிடுவதன் உண்மையான நோக்கம் என்னவென்றால், நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு இரட்சிப்பிற்காக கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க தனது வாசகர்களை அழைப்பதாகும். யோவானின் நோக்கத்தையும் நம்பிக்கைகளையும் புரிந்துகொள்வது, அவருடைய சுவிசேஷத்தை இன்னும் பொருத்தமாக வியாக்கியானம் செய்ய உதவுகிறது என்பதை நாம் பார்க்க முடியும்.

வேதாகமத்தின் அர்த்தத்திற்கான வழிகாட்டியாக எழுத்தாளரை நம்புவதன் நன்மைகளைக் கருத்தில் கொண்டு, வேத ஆவணத்தின் மீது நம் கவனத்தைத் திருப்புவோம்.

## ஆவணம்

ஆவணம் என்ற சொல்லைப் பயன்படுத்துவது அதன் சொற்கள், இலக்கணம், பேச்சின் உருவங்கள், வாக்கிய அமைப்பு, முறையான அமைப்பு, அதன் வாதத்தின் சுருக்கம், சுற்றியுள்ள இலக்கிய சூழல் மற்றும் பலவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். வேதாகமத்தை பொறுப்புடன் வியாக்கியானம் செய்வதற்கு, ஏவப்பட்ட ஆசிரியர் எழுதிய உண்மையான வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களை நாம் உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

ஒரு வேதாகம ஆவணத்தை ஆராயும்போது நாம் நினைவில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று, அது அதன் அர்த்தத்தை வெவ்வேறு அளவுகளின் அலகுகளில் வெளிப்படுத்துகிறது என்பதாகும். அர்த்தத்தின் இந்த பல்வேறு அலகுகள் வெவ்வேறு வகைகளில் வேறுபடுகின்றன, ஆனால் பொதுவாக, அர்த்தம் உருவங்களால் வெளிப்படுத்தப்படுகிறது, அவை ஒருமை மற்றும் பன்மை மற்றும் வினைச்சொல் காலங்கள் போன்ற விஷயங்களைக் குறிக்கும் சொற்களின்

சிறிய அம்சங்களாகும். சொற்கள் மூலமாகவும், பின்னர் சொற்றொடர்கள், உட்பிரிவுகள், வாக்கியங்கள், உரைநடையில் பத்திகள், கவிதையில் செய்யுள்கள் மூலமாகவும் அர்த்தம் தெரிவிக்கப்படுகிறது. முழு விவரிப்புகள், உரைகள் அல்லது சட்டக் குறியீடுகள் மற்றும் முழு புத்தகங்கள் போன்ற பெரிய பிரிவுகள் அர்த்தத்தின் அலகுகளாக செயல்படுகின்றன. சுவாரஸ்யமாக, பெரிய அலகுகளின் வெளிச்சத்தில் சிறிய அலகுகளின் அர்த்தம் தெளிவாகிறது. சிறிய அலகுகளின் வெளிச்சத்தில் பெரிய அலகுகளின் அர்த்தம் தெளிவாகிறது. எனவே, ஒரு வேதாகம ஆவணம் அதன் அர்த்தத்தை நோக்கி நம்மை எவ்வாறு வழிநடத்துகிறது என்பதைப் பார்க்க விரும்பும்போதெல்லாம், இந்த அனைத்து நிலைகளிலும் அதை ஆராய நாம் தயாராக இருக்க வேண்டும்.

நாம் எதைக் குறிக்கிறோம் என்பதை விளக்க, யோவான் 3:16 இன் ஒரு பக்கத்தைப் பார்ப்போம், அது பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

நாம் முன்னரே பார்த்தபடி, யோவான் 3:16 ”தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்…” என்று கூறுகிறது. சுவிசேஷ சபையார் இந்த சொற்றொடரை ”தேவன் இந்த உலகத்தை அதிகமாக நேசித்தார்…”, ”தேவன் உலகத்தை மிகவும் பிரியமாக நேசித்தார்…” அல்லது ”தேவன் இந்த உலகத்தை மிகவும் நேசித்தார்…” என்று இப்படி அர்த்தப்படுத்துவது மிகவும் பொதுவானது. யோவான் 3:16 இன் தொடக்கத்தைப் பற்றிய இந்த புரிதல் மிகவும் நீண்ட காலமாகவும் பரவலாகவும் உள்ளது, ”இவ்வளவாய்” என்ற வார்த்தையை யோவான் ”மிகவும் பெரியது,”, ”மிகவும் அன்பானது” அல்லது ”அதிக அளவில்” என்று எடுத்துக் கொள்ள விரும்புகிறாரா இல்லையா என்று நம்மில் பலர் கேள்வி எழுப்புவதில்லை. ஆனால் யோவான் 3:16-ஐ அதன் பரந்த பின்னணியில் பார்க்கும்போது, இது ”இவ்வளவாய்” என்ற வார்த்தையின் முக்கியத்துவம் அல்ல என்பது விரைவில் தெளிவாகிறது.

முதலில், ”இந்த விதமாக” என்ற சொல் தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட கிரேக்க வார்த்தையான *ஹௌடோஸின்* மொழிபெயர்ப்பாகும். இந்த கிரேக்க பதம் எப்போதாவது ”மிகவும்” அல்லது ”இவ்வளவு” என்ற அர்த்தங்களைக் கொண்டுள்ளது, ஆனால் பெரும்பாலும் இது ”இவ்வாறு”, ”இந்த வழியில்” அல்லது ”இந்த வழியில்” என்று பொருள் கொள்ளப் பயன்படுகிறது. யோவான் 3:16 வசனத்தில் யோவான் ”இவ்வளவாய்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதை அதற்குச் சற்று முன் வரும் வசனங்களுடன் ஒப்பிடுவதன் மூலம் நாம் இதைக் காணலாம். யோவான் 3:14-15 இவ்வாறு சொல்கிறது:

> சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும் (யோவான் 3:14-15).

இந்த வசனங்களில் இயேசு "மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தைத் தூக்கிய" நேரத்திற்கும் "மனுஷகுமாரனாகிய" இயேசுவே "தூக்கப்பட வேண்டிய" நேரத்திற்கும் இடையே ஒரு ஒப்பீட்டை அமைத்தார்.

15-வது வசனத்தில், இயேசு எண் 21:4-9 ஐக் குறிப்பிட்டார், அதில் தேவன் வனாந்தரத்தில் இஸ்ரவேலருக்கு எதிராக விஷ சர்ப்பங்களை அனுப்பி அவர்களைத் தண்டித்தார். இஸ்ரவேல் மக்கள் விடுதலைக்காகக் கூக்குரலிட்டனர். தேவனுடைய கட்டளைப்படி, மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் வைத்து, அந்த சர்ப்பத்தை ஆகாயத்தில் தூக்கி, அதைப் பார்த்த இஸ்ரவேலர் எல்லாரும் குணமடைந்தார்கள். இந்த ஒப்புமையின் மூலம், தான் உயிர்த்தெழுப்பப்படும்போது, அவரைப் பார்க்கும் எல்லா மக்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்பதை இயேசு தெளிவுபடுத்தினார்.

"மோசே சர்ப்பத்தை தூக்கியது போல… மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும்" என்று இயேசு கூறியது முக்கியமானது என்பதைக் குறிப்பிட வேண்டும். இந்த ஒப்பீட்டில், "இவ்வளவாய்" என்று தமிழ் ஒலிபெயர்ப்பு கொண்ட கிரேக்க சொல் 16 வது வசனத்தின் தொடக்கத்தில் தோன்றும் அதே சொல்லாகிய, *ஹௌடோஸ்* ஆகும். சர்ப்பமானது "இவ்வாறு" அல்லது "அதே வழியில்" உயர்த்தப்பட்டது போலவே, மனுஷ குமாரனும் உயர்த்தப்பட வேண்டும் என்று இயேசு சொன்னார். 16-ம் வசனத்தில் இதே வார்த்தையைப் பயன்படுத்தியபோது யோவான் இந்த ஒப்பீட்டை எடுத்தார்.

உண்மையில், மோசே சர்ப்பத்தை தூக்குவதை இரண்டாவது ஒப்பீடு செய்வதற்காக யோவான் ஹௌடோஸ் என்ற வார்த்தையை மீண்டும் கூறினார். ஆனால் 16-ம் வசனத்தில், மோசே என்ன செய்தார் என்பதற்கும், தேவன் தம்முடைய ஒரே குமாரனைக் கொடுத்தபோது என்ன செய்தார் என்பதற்கும் இடையே ஒப்பீடு உள்ளது. அல்லது நாம் சொல்வது போல, "மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை தூக்கியதைப் *போல* … தேவன் தம்முடைய ஒரே குமாரனை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனைப் பெறும்படிக்கு, உலகத்தை நேசித்தார்.

இந்த எடுத்துக்காட்டு ஒரு வேத பகுதியின் ஆவணத்தை கவனமாக பரிசீலிப்பது அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு சிறிய வழியை விளக்குகிறது.

எழுத்தாளரும் ஆவணமும் வியாக்கியானத்திற்கு பயனுள்ள வழிகாட்டிகளாக எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றிய இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புரிதலுடன், வாசகர்களை மூன்றாவது வழிகாட்டியாகக் கருத நாம் தயாராக இருக்கிறோம்.

## வாசகர்கள்

> வேதாகமத்தில் உள்ள புத்தகம் எழுதப்படும் வரலாற்று பின்னணியைப் புரிந்துகொள்வது முக்கியமாகும், ஏனென்றால் வேதாகம இலக்கியத்தைப் பற்றிய குறிப்பிடத்தக்க விஷயங்களில் ஒன்று, தேவன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மற்றும் குறிப்பிட்ட நபர்களுடன் அவர்களின் அக்கறைகள் மற்றும் கவலைகள், அச்சங்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய அவர்களின் நம்பிக்கைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டுபேசினார். தேவன் தம்மை வெளிப்படுத்துவதற்காக இந்த வழியில் அவர்களிடம் பேசினார், அந்த செய்தியின் ஒரு பகுதியாக நாம் இருக்கிறோம், இருப்பினும், அது அவர்களின் குறிப்பிட்ட வரலாற்று பின்னணியின் மூலம் மத்தியஸ்தம் செய்யப்படுவதால், அதை நாமே பெறுகிறோம்.
>
> – Dr. ஸ்காட் ரெட்

வேதாகமத்தினுடைய ஒரு பகுதியின் அசல் வாசகர்களை நாம் கருத்தில் கொள்ளும் போதெல்லாம், எல்லா வகையான கேள்விகளையும் கேட்க நாம் தயாராக இருக்க வேண்டும். முதலில், வாசகர்களின் அடையாளத்தை அறிய விரும்புகிறோம். அவர்கள் யார் என்பதை அறிய விரும்புகிறோம். சில நேரங்களில், வாசகர்கள் யார் என்பதை வேதாகமம் நமக்கு வெளிப்படையாகக் கூறுகிறது. எடுத்துக்காட்டாக, ரோமருக்கு பவுல் எழுதிய புதிய ஏற்பாட்டு நிருபம் வாசகர்களை ரோமில் வாழும் கிறிஸ்தவர்களாக அடையாளம் காட்டுகிறது. கலாத்தியர்களின் சபைகளை கலாத்தியர் நிருபம் அதன் வாசகர்களாக அடையாளம் காண்கிறது. ஆனால் அதே நேரத்தில், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் உள்ள பெரும்பாலான புத்தகங்கள் வாசகர்களை நேரடியாக அடையாளம் காண்பதில்லை. இந்த வழக்குகளில், மறைமுக தடயங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். எல்லா நிகழ்வுகளிலும், ஏதாவது ஒரு வகையில், பொதுவான வரலாற்று ஆராய்ச்சியும் வேதாகமமும் எப்போதும் அசல் வாசகர்களின் பொதுவான சுயவிவரத்தை உருவாக்க நமக்கு உதவுகின்றன. பின்வரும் இது போன்ற கேள்விகளுக்கு பதிலளிக்க நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்: வாசகர்கள் எங்கே வாழ்ந்தார்கள்? அவர்களின் வரலாற்றுச் சூழல் என்ன? அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன? அவர்களுக்கு என்ன கருத்தியல், நடத்தை மற்றும் உணர்ச்சி

தேவைகள் இருந்தன? அசல் வாசகர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த அனைத்தும் வேதாகமத்தின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கு நம்மை வழிநடத்துகின்றன.

மூல வாசகர்கள் வேதாகமத்தை எழுதுவதற்கு நேரடியாக பங்களிக்கவில்லை என்றாலும், வேதாகம எழுத்தாளர்கள் வழக்கமாக அசல் மற்றும் இரண்டாம் நிலை வாசகர்களை மனதில் கொண்டு தங்கள் புத்தகங்களை இயற்றினர். சிலருக்காக நேரடியாகவும், மறைமுகமாக மற்றவர்களுக்காகவும் எழுதினார்கள். ஏனென்றால், வேதவாக்கியங்கள் முதன்முதலில் எழுதப்பட்டபோது எழுத்தறிவு என்பது ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்த பாக்கியம். எனவே, வேதாகம ஆசிரியர்கள் பலர் தங்கள் புத்தகங்களை எடுத்து வாசிப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. இருப்பினும், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை அசல் வாசகர்களைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு வேதாகமப் பகுதிகளின் அசல் அர்த்தத்தை நாம் ஆராய முடியும்.

ஒரு வேதாகம புத்தகத்தின் அசல் வாசகர்களை மனதில் வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை விளக்க யோவானின் சுவிசேஷத்திற்கு மீண்டும் வருவோம். யோவானின் சுவிசேஷத்தைப் பொறுத்தவரை, யோவானின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை வாசகர்களைப் பற்றிய மறைமுக தடயங்களை நாம் நம்ப வேண்டும். ஒன்று, பாலஸ்தீனத்தின் பழக்கவழக்கங்களை விளக்க வேண்டியதன் அவசியத்தை யோவான் அடிக்கடி உணர்ந்தார். ஒரு சமாரியப் ஸ்திரீயுடன் இயேசு நடத்திய உரையாடலைப் பற்றி யோவான் 4:9-ல் அவர் எழுதியதைக் கவனிக்கவும்:

> சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: ”நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம்?” என்றாள் (யோவான் 4:9).

யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையிலான பிரிவைப் பற்றி அவரது வாசகர்களில் சிலராவது அறிந்திருக்கவில்லை என்பது யோவானின் கருத்துகளிலிருந்து தெரிகிறது. எனவே, இத்தகைய பழக்கவழக்கங்கள் அனைவருக்கும் தெரிந்த பாலஸ்தீனத்தில் வாழும் மக்களுக்காக யோவான் முதன்மையாக எழுதினார் என்பதை நம்புவது மிகவும் கடினம். உண்மையில், யோவானின் வாசகர்களில் சிலர் பெரும்பாலும் புறஜாதியினராக இருந்திருக்கலாம், ஏனென்றால் இரண்டு முறை - 1:41 மற்றும் 4:25 இல் - கிறிஸ்டோஸ் என்று தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட கிரேக்க வார்த்தை ”மேசியா” என்று தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட எபிரெய வார்த்தைக்கு சமமானது என்பதை விளக்க வேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். இன்னும் ஒரு எடுத்துக்காட்டாக, யோவான் 9:22-ல் யோவான் கூறிய கருத்தைக் கேளுங்கள்:

> இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள் (யோவான் 9:22).

இந்த வேத பகுதியில், ஜெப ஆலயத்திலிருந்து வெளியேற்றப்படுவது யூத சமூகத்தின் வாழ்க்கையிலிருந்து விலக்கப்பட்டதாக இருந்தது.

யோவானின் வாசகர்களில் புறஜாதியினரும் பாலஸ்தீனத்திற்கு வெளியே இருந்து வந்தவர்களும் அடங்குவர் என்று நாம் கருதுவது மட்டுமல்லாமல், அவரது வாசகர்களும் ஒரு முக்கியமான சவாலை எதிர்கொண்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இயேசுவையும் அவரைப் பின்பற்றியவர்களையும் எதிர்த்தவர்களைக் குறிக்க யோவான் "யூதர்கள்" என்ற சொல்லாடலைப் பயன்படுத்தினார் என்பது இந்த சவாலுக்கு ஒரு துணுக்காக தெரிகிறது. இந்த சுவிசேஷம் யூத-விரோதமானது என்று சில வியாக்கியான அறிஞர்கள் வாதிடும் அளவுக்கு இந்த கருப்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது. நிச்சயமாக, இயேசு, யோவான் மற்றும் இயேசுவின் மற்ற அப்போஸ்தலர்கள் யூதர்களாக இருந்தனர், எனவே இது வெறுமனே இனத்தைப் பற்றிய குறிப்பு அல்ல. மாறாக, இயேசுவை நம்பாமல் திருச்சபையைத் துன்புறுத்திய யூதர்களை யோவான் மனதில் வைத்திருந்தார்.

விசுவாசமற்ற யூதர்களை இயேசுவின் எதிரிகள் என்றும் அவரைப் பின்பற்றுபவர்கள் என்றும் யோவான் அடிக்கடி குறிப்பிடுவது, யோவானின் வாசகர்களும் தங்கள் விசுவாசத்திற்காக துன்புறுத்தலை எதிர்கொண்டனர் என்பதை வலுவாகக் காட்டுகிறது. விசுவாசமற்ற யூதர்கள் இயேசுவையும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களையும் நிராகரித்ததற்கான காரணங்களை யோவானின் சுவிசேஷம் அடிக்கடி குறிப்பிடுகிறது. நமது நோக்கங்களுக்காக, இரண்டை மட்டுமே குறிப்பிடுவோம்.

ஒருபுறம், விசுவாசமற்ற யூதர்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொண்டதால் அவர் தேவ தூஷணம் செய்ததாக குற்றம் சாட்டினர். யோவான் 10:36-ல் இயேசு தம் யூத எதிரிகளைக் கண்டித்த விதத்தைக் கவனியுங்கள்:

> "நான் தேவனுடைய குமாரன்" என்று நான் சொன்னதற்காக நீங்கள் ஏன் என்மீது தேவ தூஷணம் செய்ததாக குற்றம் சாட்டுகிறீர்கள்? (யோவான் 10:36).

இந்த வசனம் குறிப்பிடுவது போல, இயேசு தேவனுடைய குமாரன் என்று கூறியது யூதர்கள் அவரை நிராகரித்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மறுபுறம், இயேசுவின் யூத எதிரிகளும் அவரை வெறுத்தனர், ஏனெனில் அவர் புறஜாதிகளுக்கும் யூதர்களுக்கும் இரட்சிப்பின் நம்பிக்கையைக் கொண்டு வந்தார். இயேசு யூதர்களின் இரட்சகர் மட்டுமல்ல, உலகில் உள்ள ஒவ்வொரு குழுவின் இரட்சகர் என்பதை யோவான் தனது வாசகர்களுக்கு தெளிவுபடுத்துகிறார். எடுத்துக்காட்டாக, யோவான் 4:42-ல், இயேசு கிணற்றடியில் சந்தித்த சமாரிய ஸ்திரீயின் சாட்சியைக் கேட்ட பிறகு சமாரியர்களின் பதிலை வாசிக்கிறோம்:

> மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் (யோவான் 4:42).

யோவானின் பார்வையில், இயேசு யூதர்களின் இரட்சகர் மட்டுமல்ல, ”உலக இரட்சகர்” ஆவார்.

யோவானின் அசல் வாசகர்களுக்கு இந்த இரண்டு கருப்பொருள்களின் முக்கியத்துவம் யோவான் 3:16 போன்ற பகுதிகளை விளக்க உதவுகிறது, அங்கு இயேசு தேவனுடைய ”ஒரே குமாரன்” என்றும், ”தேவன் உலகத்தை மிகவும் நேசித்ததால்” பிதா அவரை அனுப்பினார் என்றும் யோவான் வலியுறுத்தினார்.

> வேதத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகமும் அசல் வாசகர்களுக்காக எழுதப்பட்டது, 21 ஆம் நூற்றாண்டில் வாழும் நாம் அசல் வாசகர்கள் அல்ல. புதிய ஏற்பாட்டில் உள்ள பெரும்பாலான தனிப்பட்ட புத்தகங்கள் நிருபங்கள் அல்லது கடிதங்கள் என்பதை உணர்ந்துகொள்வது சுவாரஸ்யமானதாகவும் உதவியாகவும் இருக்கும் என்று நான் நினைக்கிறேன், எனவே நாம் அந்த நிருபங்களைப் படிக்கும்போது - நீங்கள் அதை முழு வேதாகமத்துக்கும் விரிவுபடுத்தலாம் என்று நினைக்கிறேன் ... மற்றவர்களின் கடிதத்தை நாம் வாசிக்கிறோம் என்பது தான் உண்மை. நாம் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவை நமக்கானவை, ஆனால் அவை முதலில் அசல் வாசகர்களுக்கு எழுதப்பட்டன, புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரை, அசல் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவ வாசகர்களுக்கு எழுதப்பட்டது. எனவே அசல் வாசகர்கள் மற்றும் அசல் வேதாகம எழுத்தாளரின் அசல் நிலைமையையும் கவலைகளையும் புரிந்துகொள்வதற்கான கடின உழைப்பை நாம் செய்தால் புத்தகத்தைப் பற்றி நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். அந்த அசல் புரிதலை நாம் இன்று நமது சொந்த சூழ்நிலைக்கு பயன்படுத்துவதற்கு முன்பு பெற முயற்சிக்க வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

– Dr. ராபர்ட் கே. மெக்இவான்

வேதத்தின் அர்த்தத்திற்கு வழிகாட்டியாக எழுத்தாளர், ஆவணம் மற்றும் வாசகர்கள் செயல்படக்கூடிய வழிகளை இப்போது நாம் பரிசீலித்துள்ளோம், அவை ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை இப்போது பார்ப்போம்.

## ஒன்றையொன்று சார்ந்திருத்தல்

நாம் வேதத்தை பொறுப்புடன் வியாக்கியானம் செய்வதற்கு, நாம் குறிப்பிட்டுள்ள வழிகாட்டிகள் ஒவ்வொன்றும் மற்றவர்களால் தெரிவிக்கப்படுகின்றன மற்றும் தெரிவிக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம். ஆசிரியரைப் பற்றிய நமது அறிவு அவரது ஆவணத்தையும் அசல் வாசகர்களையும் புரிந்துகொள்ள உதவுகிறது. வாசகர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த விஷயங்கள் எழுத்தாளரின் நோக்கங்களையும் அவரது ஆவணத்தின் நுணுக்கங்களையும் புரிந்துகொள்ள உதவுகின்றன. ஆவணத்தின் சொற்கள் மற்றும் இலக்கணம் எழுத்தாளர் மற்றும் வாசகர்களைப் பற்றிய தகவல்களை நமக்கு வழங்குகிறது. எனவே, வியாக்கியானம் செய்பவர்களாகிய நாம் இந்த எல்லா ஆதாரங்களிலிருந்தும் முடிந்தவரை அதிக வழிகாட்டுதல்களைப் பெற வேண்டும், இதனால் வேதாகமத்தின் வாசிப்புகள் அவற்றில் ஒன்று அல்லது இரண்டில் மட்டுமே சமநிலையற்ற அழுத்தத்தால் திசைதிருப்பப்படாமல் இருக்கும்.

எழுத்தாளர், ஆவணம் மற்றும் வாசகர்கள் அர்த்தத்திற்கு ஒன்றையொன்று சார்ந்துள்ள வழிகாட்டிகள் ஆகும். அவை ஒன்றையொன்று சார்ந்திருப்பதை நாம் கணக்கிடத் தவறினால், தவறில் விழுவது மிகவும் எளிதாகும்.

எழுத்தாளரை மிகைப்படுத்தினால், நாம் பெரும்பாலும் வேண்டுமென்றே தவறான எண்ணத்தில் விழுந்து விடுகிறோம். நாம் என்ன நினைக்கிறோம் என்பதைப் பொருத்து வியாக்கியானம் செய்வது ஒரு எழுத்தாளரைப் பற்றியும் அவரது நோக்கங்களைப் பற்றியும் நமக்குத் தெரியும் என்று நாம் நினைப்பதைப் பெரிதும் சார்ந்துள்ளது, மேலும் ஆவணம் மற்றும் வாசகர்களைப் பற்றி நாம் கற்றுக் கொள்ளும் விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

வேதாகம வியாக்கியானத்தில் வேண்டுமென்றே தவறுகளைச் செய்ய பல வழிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, ஒரு எழுத்தாளர் எழுதும்போது அவர் என்ன நினைத்துக் கொண்டிருந்தார் என்பதைப் பற்றி ஊகிப்பதன் மூலம் அவரது நோக்கங்களைப் பற்றி தேவையற்ற அனுமானங்களை நாம் செய்யலாம். அல்லது ஒரு எழுத்தாளரைப் பற்றிய சரியான தகவல்கள் நாம்

வியாக்கியானம் செய்யும் வேத பகுதிக்கு மிகவும் பொருத்தமானது என்று தவறாகக் கருதுவதன் மூலம் மிகைப்படுத்தலாம்.

யோவான் 3:16 ஐப் பார்ப்பதன் மூலம் இதை விளக்கலாம். யோவான் இந்த வசனத்தை எழுதியபோது, கிறிஸ்துவின் மரணத்தில் காட்டப்பட்ட தேவனுடைய அன்பைப் பற்றி தனது வாசகர்களின் கவனத்தை ஈர்க்க விரும்பினார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். ஆனால் இந்த வார்த்தைகளை எழுத யோவானைத் தூண்டிய நுட்பமான, உளவியல் தாக்கங்கள் அனைத்தையும் நாம் உறுதியாக நம்ப முடியாது. வேதாகமமும் நம்பகமான வரலாறும் யோவானின் உள் எண்ணங்களைப் பற்றி இந்த வகையான முடிவுகளை எடுப்பதற்கு போதுமான தடயங்களை நமக்குத் தருவதில்லை. நம்மால் முடிந்தாலும்கூட, அவருடைய உள் எண்ணங்கள் யோவான் 3:16 இன் அர்த்தத்திற்கு குறிப்பாக பொருந்தாது.

> ஒரு வேத பகுதியின் அதிகாரம் மற்றும் நோக்கத்திற்கு அதிக மதிப்பு கொடுக்கும் வியாக்கியான அறிஞர்கள் சில நேரங்களில் வேண்டுமென்றே தவறு செய்வதாக குற்றம் சாட்டப்படுகிறார்கள், அதாவது வேத பகுதியில் ஆசிரியர் உண்மையில் எதைக் குறிக்கிறார் என்று நாம் நினைத்தோம் என்பதை நாம் எப்படியாவது ஊகிக்கிறோம்… எழுத்தாளர்கள் தங்களுடைய வாசகர்கள் புரிந்து கொள்ள விரும்புவதைத் தொடர்பு கொள்ள முடிகிறது என்று நாம் சொல்ல முடியாது என்று அர்த்தமல்ல. எனவே, உலகின் மறுபக்கத்தில் இருக்கும் என் மனைவிக்கு நான் மின்னஞ்சல் எழுதுவதாக இருந்தாலும் சரி, அல்லது இன்று செய்தித்தாளில் ஏதாவது எழுதும் எழுத்தாளராக இருந்தாலும் சரி, அல்லது ஒரு நவீன புத்தகத்தை எழுதும் எழுத்தாளராக இருந்தாலும் சரி, எல்லா எழுத்தாளர்களும் தங்கள் செய்தியை அவர்கள் யார் மூலமாகவும், அந்த வேத பகுதியை எழுதுவதன் மூலமும் கொண்டு வர ஒரு வழி இருப்பதாக கருதுகிறார்கள். மேலும் அவர்கள் அந்த வேத பகுதியின் மூலம் தங்களைப் பற்றி சிலவற்றை வெளிப்படுத்துகிறார்கள். நிச்சயமாக, அதனுடன் சேர்த்து, வேதாகமத்தின் இறுதி ஆசிரியர் மனித எழுத்தாளர்கள் மட்டுமல்ல, உண்மையில் மனித ஆசிரியருடன் பணிபுரியும் தெய்வீக ஆசிரியர் என்று நாம் நம்புகிறோம், எனவே அந்த மனித எழுத்தாளர்களுக்கு வேதத்தை முதலில் எழுத பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார் என்று நாம் நம்புகிறோம். ஆனால் நவீன வாசகர்கள் அதைப் படிக்க இது உதவுகிறது, இதனால் ஆசிரியர் தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மனதில் என்ன அர்த்தப்படுத்துகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

– Dr. சைமன் வைபர்ட்

நாம் செய்யக்கூடிய இரண்டாவது வகை தவறு ஆவணத்தை மிகைப்படுத்துவதாகும். இந்த வகையான பிழை பெரும்பாலும் வரைகலை ஏரணப்பிழை என்று அழைக்கப்படுகிறது. வரைகலை என்கிற தமிழ் சொல்லைக் குறிக்கும் "கிராஃபிக்" என்ற சொல் கிரேக்க வார்த்தையான *கிராஃபேவிலிருந்து* வந்தது, இதன் பொருள் "எழுத்து" ஆகும். அதற்கேற்ப, வரைகலை ஏரணப்பிழை ஆவணத்தையே மிகைப்படுத்துகிறது, எழுத்தாளர் மற்றும் வாசகர்கள் போன்ற சூழலியல் பரிசீலனைகளை ஒப்பீட்டளவில் விலக்கி வைக்கிறது. வேத ஆவணமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட ஆவணம் அதை யார் எழுதினார்கள், யாருக்காக எழுதப்பட்டது என்பதைப் பொறுத்து மிகவும் வேறுபட்ட விஷயங்களைக் குறிக்கலாம். ஒரு வேத பகுதியின் அர்த்தத்தை அதன் ஆசிரியர் அல்லது அசல் வாசகர்களைப் பொருட்படுத்தாமல் அதன் சொற்கள், இலக்கணம் மற்றும் கட்டமைப்பை பகுப்பாய்வு செய்வதன் மூலம் மட்டுமே நாம் போதுமான அளவு புரிந்து கொள்ள முடியும் என்று நினைத்து இந்தப் பிழையை நாம் செய்யலாம்.

யோவான் 3:16-ல் இருந்து வரும் நமது எடுத்துக்காட்டில், நாம் ஆவணத்தில் மட்டுமே கவனம் செலுத்தி, யோவானையும் அவருடைய அசல் வாசகர்களையும் புறக்கணித்தால் என்ன நடக்கும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். தேவனுடைய குமாரன் யார் என்று நமக்கு எப்படித் தெரியும்? எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த வசனம் அவரை வெளிப்படையாக அடையாளம் காட்டவில்லை. யோவான் ஒரு கிறிஸ்தவர் என்பதும், அவர் ஒரு கிறிஸ்தவ வாசகர்களுக்கு எழுதினார் என்பதும் வாசகர்களுக்குத் தெரியாவிட்டால், அவர்கள் எல்லா வகையான பொறுப்பற்ற அனுமானங்களையும் செய்யலாம்.

கானானிய தேவர்களை வழிபடும் ஒரு அவிசுவாசி கானானிய தேவனான ஏலின் மகனான பாகால்தான் "தேவனுடைய குமாரன்" என்று நினைக்கலாம்.

லூக்கா 3:38-ல் ஆதாம் "தேவனுடைய குமாரன்" என்று அழைக்கப்படுகிறார் என்ற உண்மையை நன்கு அறிந்த ஒருவர் யோவான் 3:16-ல் ஆதாம் தேவனுடைய குமாரன் அல்லது ஆதாமும் இயேசுவும் ஒரே நபர் என்று தவறாக முடிவு செய்யலாம்.

மற்ற வாசகர்கள் ஒன்று அல்லது உலகம் அல்லது நித்திய ஜீவன் என்ற கருத்தாக்கத்தால் குழப்பமடையக்கூடும். எழுத்தாளரையும் வாசகர்களையும் புறக்கணிக்கும் போது நாம் செய்யக்கூடிய பல தவறுகள் உள்ளன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் செய்யக்கூடிய மூன்றாவது வகையான விளக்கத் தவறு வாசகர்களை மிகைப்படுத்துவதாகும். வேதாகமம் அதன் வாசகர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதில் இது அதிக கவனம் செலுத்துவதால் இது பெரும்பாலும் ஒரு தாக்கப் பிழை என்று அழைக்கப்படுகிறது. ஒரு வியாக்கியான அறிஞர் அசல் வாசகர்களின் மனநிலையைப் பற்றி அதிகமாக ஊகிக்கும்போது, எழுத்தாளருக்கும் ஆவணத்திற்கும் போதுமான கவனம் செலுத்தத் தவறும்போது இந்த தவறு பெரும்பாலும் செய்யப்படுகிறது. வேதாகமத்தின் அசல் வாசகர்கள் மீதான விளைவுகளையும், நம்பகமான வரலாற்றிலிருந்து வாசகர்களைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளும் விஷயங்களையும் கருத்தில் கொள்வது நிச்சயமாக நியாயமானது. ஆனால் வேத பகுதியின் மீது வாசகர்களின் தனிப்பட்ட எதிர்வினைகளை மிகைப்படுத்துவதன் மூலம் தாக்கப் பிழை செல்கிறது, மேலும் கிட்டத்தட்ட எப்போதும் வேதாகமத்தின் அகநிலையானது, நம்பகத்தன்மையற்ற வாசிப்புகளுக்கு வழிவகுக்கிறது.

எடுத்துக்காட்டாக, யோவான் 3:16-ல், உண்மையான வாசகர்களின் சூழ்நிலைகள் மற்றும் நித்திய ஜீவனைப் பற்றிய யோவானின் போதனைக்கான எதிர்வினை ஆகியவற்றைப் பற்றி தாக்கப் பிழை அதிகமாக ஊகிக்கக்கூடும். ஜீவனைப் பற்றி யோவான் பேசியபோது, அவருடைய அசல் வாசகர்கள் அனுபவித்து வந்த துன்புறுத்தலிலிருந்து பூமிக்குரிய முறையில் தப்பிப்பதுதான் அவர் உண்மையில் அர்த்தப்படுத்தினார் என்றும் நாம் என்றென்றும் அனுபவிக்கும் ஆவிக்குரிய புதுப்பித்தலையோ அல்லது ஆசீர்வாதத்தையோ அல்ல என்றும் அது பரிந்துரைக்கலாம். இந்த வியாக்கியானம் யோவானின் பரந்த போதனையையும் ஆவணத்தின் விவரங்களையும் புறக்கணித்து, அதன் வாசகர்கள் மீது வேத பகுதியின் தாக்கத்தை மிகைப்படுத்தும்.

> வேதாகமத்தின் ஒரு புத்தகம் இவ்வாறு எழுதப்பட்ட அசல் வாசகர்களின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியும்: முதலாவதாக, அதை மிகவும் குறிப்பிட்டதாக மாற்றுவதன் மூலம், குறிப்பாக, நாம் அவர்களைப் பற்றி அதிகம் அறிந்திருக்கிறோம் என்று நினைப்பதன் மூலம் மிகைப்படுத்த முடியும். பெரும்பாலான புதிய ஏற்பாட்டு புத்தகங்களுக்கும் பழைய ஏற்பாட்டு புத்தகங்களுக்கும் இது பொருந்தும். ஆனால் நான் புதிய ஏற்பாட்டு புத்தகங்களைக் குறித்து இங்கே பேசுகிறேன். பெரும்பாலான புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் வாசகர்களைப் பற்றி நமக்கு நிறைய தெரியாது. எனவே, வாசகர்களைப் பற்றி நாம் அனுமானிக்க முயற்சிக்கும்போது, வேறு வகையான வாசகர்களைக் குறித்து நாம் கனவு காண்கிறோம் என்பதால் நாம் தவறாகப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> புரிந்து கொள்ள வாய்ப்புள்ளது. எபிரெயர் நிருபத்தை நான் நன்றாகப் படித்திருக்கிறேன், இந்த நிருபம் எழுதப்பட்ட குறிப்பிட்ட வாசகர்களைக் குறித்து அனைத்து வகையான எல்லா மக்களுக்கும் ஒரு அனுமானம் உள்ளது... உண்மையில், இது அவர்களின் வியாக்கியானத்தை திசைதிருப்புகிறது, ஏனெனில் இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டது என்பது நமக்குத் தெரியாது. எனவே இந்ந புத்தகங்கள் முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டவை என்பதை உணர வேண்டும். அந்த நூற்றாண்டின் கலாச்சாரம், மொழி மற்றும் அவை எவ்வாறு எழுதப்பட்டன போன்றவற்றைப் புரிந்துகொள்வது முக்கியம். ஆனால் நமக்குத் தெரிந்ததைத் தாண்டி அசல் வாசகர்களைப் பற்றிய ஒரு கருத்தை வளர்க்காமல் இருப்பதும் முக்கியம். எடுத்துக்காட்டாக, சுவிசேஷங்களைப் பொறுத்தவரை, அவை திருச்சபையை வளர்ப்பதற்காக கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டவை என்று நமக்குத் தெரியும், ஆனால் அதற்கு மேல் நமக்கு அதிகம் தெரியாது. நாம் செய்கிறோம் என்று நினைக்காமல் இருப்பது முக்கியம். அப்படிச் செய்தால் வேதத்தை தவறாக வியாக்கியானம் செய்து விடுவோம்.
>
> – Dr. கேரி காக்கரில்

வருத்தப்படும் விதமாக, குறிப்பாக சில வழிகாட்டிகளைப் பற்றி நமக்கு அதிக தகவல்கள் இல்லாதபோது, வேண்டுமென்றே செய்கிற பிழை, வரைகலை ஏரணப் பிழை மற்றும் தாக்கப் பிழை போன்ற தவறுகள் செய்வது எளிதாகும். உண்மை என்னவென்றால், ஒரு வேத பகுதியின் எழுத்தாளர் அல்லது வாசகர்களைப் பற்றி நாம் எப்போதும் அதிகம் அறிய முடியாது. பல வேத புத்தகங்களின் எழுத்தாளர்கள் யார் என்று நமக்குத் தெரியாது, மேலும் பலர் தங்கள் வாசகர்களை வெளிப்படையாக அடையாளம் காணவில்லை. சில நேரங்களில் ஆவணத்தைப் பற்றிய முக்கியமான தகவல்கள் கூட நம்மிடம் இல்லை. வேதாகமத்தின் மூல மொழிகளில் விஷயங்கள் கூறப்பட்ட விதத்தின் உட்குறிப்புகள் போன்ற அதன் அனைத்து அம்சங்களையும் புரிந்துகொள்ள உதவும் வளங்களுக்குரிய நமக்கு அணுகல் நம்மிடம் இல்லை. நம்முடைய தகவல்கள் மிகவும் குறைவாக இருக்கும்போது, நமது வியாக்கியானங்கள் மிகவும் பொதுமைப்படுத்தப்படுவது பொதுவாக புத்திசாலித்தனம். ஆயினும்கூட, எழுத்தாளர், ஆவணம் மற்றும் வாசகர்களிடமிருந்து நாம் பெறும் வழிகாட்டுதல்கள் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை நாம் சரியாகக் கணக்கிடும்போது, இந்த வழிகாட்டிகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும்

அனைத்தும் நமது வியாக்கியானங்களை மேம்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

அர்த்தத்தைக் கண்டுபிடிப்பது குறித்த நமது விவாதத்தில் இதுவரை, அர்த்தத்திற்கான மூன்று முக்கியமான வழிகாட்டிகளைப் பற்றி நாம் பேசியுள்ளோம். எனவே, இப்போது வேதாகம பகுதிகளின் அர்த்தத்தின் பல சுருக்கங்களைச் செய்வதன் மதிப்பில் நமது கவனத்தைத் திருப்ப நாம் தயாராக இருக்கிறோம்.

# சுருக்க பகுதிகள்

நீங்கள் நீண்ட காலமாக சபையில் இருந்திருந்தால், ஒரே வேத பகுதியிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட போதகர்கள் பிரசங்கிப்பதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். பெரும்பாலும் பிரசங்கங்கள் மிகவும் வித்தியாசமாக இருக்கும். சொல்லப்போனால், ஒரே வேத பகுதியிலிருந்து வெவ்வேறு மாறுபட்ட பிரசங்கங்களை அதன் அர்த்தத்தை மீறாமல் பிரசங்கிக்க முடியும். இது எப்படி முடியும்? எளிமையாகச் சொல்வதானால், வேதாகமத்தின் எந்த மனித வியாக்கியானமும் அதன் அர்த்தத்தில் முழுமையாகவோ அல்லது முழுமையானதாகவோ இருக்க முடியாது. கற்றுக்கொள்ள எப்போதும் நிறைய இருக்கிறது. இந்த காரணத்திற்காக, வேதப் பகுதிகளைத் தொகுக்க நாம் எப்போதும் புதிய வழிகளைத் தேட வேண்டும், இதனால் அவை எதைக் குறிக்கின்றன என்பதைப் பற்றிய நமது புரிதலை மேம்படுத்த முடியும்.

வேதாகமத்தில் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கான மிகவும் பயனுள்ள வழிகளில் ஒன்று, ஒரு வேத பகுதியை சிறு சிறு பகுதிகளாக உருவாக்குவதாகும். இந்த பாடத்தின் பின்னணியில், சுருக்கம் என்ற வார்த்தையை பின்வருவனவற்றைக் குறிக்க பயன்படுத்துவோம்:

> ஒரு வேத பகுதியின் விளக்கம்

பொதுவாக ஒரு பகுதி சுருக்கம் ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்திலிருந்து வரும் அல்லது பத்தியில் தோன்றும் ஒரு குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்தும். ஒவ்வொரு பகுதியும் ஒரு சிக்கலான அர்த்தத்தைக் கொண்டிருப்பதால், பகுதி சுருக்கங்கள் நமது ஆய்வை சுருக்குவதன் மூலம் நமக்கு உதவுகின்றன, இது வேத பகுதி என்ன சொல்கிறது என்பதில் ஒரு பகுதியில் மட்டுமே கவனம் செலுத்த அனுமதிக்கிறது.

ஒரு சிக்கலான, வியத்தகு நாடகத்தைப் பார்க்கும் மாணவர்களின் குழுவைப் பற்றி சிந்திப்பதன் மூலம் சுருக்கத்தின் கருத்தை நாம் விளக்கலாம்.

விளக்கக்காட்சிக்குப் பிறகு, மாணவர்களிடம் நாடகத்தின் அர்த்தத்தை சுருக்கமாகக் கூறும்படி கேட்கப்படுகிறது. ஒரு மாணவன் கதை முழுவதும் கதா பாத்திரங்கள் எவ்வாறு வளர்ந்தன என்பதை விவரிப்பதன் மூலம் நாடகத்தை சுருக்கமாகக் கூறுகிறான். மற்றொரு மாணவன் நிகழ்வுகளை காலவரிசைப்படி சுருக்கமாகக் கூறுகிறான். இன்னொரு மாணவன் நாடக ஆசிரியர் அன்றைய பண்பாட்டு விழுமியங்களை விமர்சிக்கும் விதத்தை விவரிக்கிறான். இறுதியாக, ஒரு மாணவன் அழகான மேடை மற்றும் மொழி தன்னை தனிப்பட்ட முறையில் எவ்வாறு பாதித்தது என்பதை விவரிக்கிறான். இந்த பதில்கள் அனைத்தும் விளக்கக்காட்சியின் அர்த்தத்தின் நியாயமான சுருக்கங்களாகும். ஆனால் இந்த சுருக்கங்கள் எதுவும் நாடகத்தின் முழு அர்த்தத்தை முழுமையாகப் பதிவு செய்யவில்லை. நாடகத்தின் முழுப் பொருளையும் நாம் தேடினால், இந்த சுருக்கங்கள் மற்றும் பலவற்றைச் சேர்க்க வேண்டும். ஆனால் பல சுருக்கங்களை உருவாக்குவது மிகவும் பயனுள்ளதாக இருப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். இது அர்த்தத்தின் தனிப்பட்ட அம்சங்களில் கவனம் செலுத்த உதவுகிறது, மேலும் இது நாடகத்தின் முழு அர்த்தத்தை மேலும் மேலும் அறிய அனுமதிக்கிறது.

வேதத்திலும் இதே நிலைதான் இருக்கிறது. வேதத்தில் உள்ள ஒரு வேத பகுதியின் அர்த்தத்தை சுருக்கமாகச் சொல்ல பல நியாயமான வழிகள் இருக்கலாம், மேலும் இந்த சுருக்கங்கள் அதன் அர்த்தத்தின் அம்சங்களை நன்கு புரிந்துகொள்ள உதவும். மேலும் ஒன்றாக எடுத்துக் கொண்டால், பல நியாயமான சுருக்கங்கள் வேத பகுதியின் முழு அர்த்தத்திற்கு நம்மை நெருக்கமாகக் கொண்டு வருகின்றன.

வேதாகமத்தினுடைய அர்த்தத்தின் பல சுருக்கங்களைச் செய்வதன் நன்மையை விளக்கும் மூன்று முக்கிய காரணிகளை நாம் கருத்தில் கொள்வோம். முதலில், வேத பகுதியின் சிக்கலான தன்மையைப் பார்ப்போம். இரண்டாவதாக, வியாக்கியான அறிஞரின் தனித்துவத்தைக் குறிப்பிடுவோம். மூன்றாவதாக, வேத பகுதி சுருக்கப்பட்ட வாசகர்களின் தேவைகளில் நாம் கவனம் செலுத்துவோம். வேத பகுதியின் சிக்கலான தன்மையை ஆராய்வதன் மூலம் தொடங்குவோம்.

## பாதையின் சிக்கலான தன்மை

முந்தைய பாடத்தில் நாம் கற்றுக்கொண்டபடி, வேதாகம பகுதிகளின் சிக்கலான தன்மைக்கு, அவற்றின் அசல் பொருள், அல்லது இலக்கியப் பொருள், வெட்டப்பட்ட ரத்தினக் கல்லைப் போல பன்முகத்தன்மை கொண்டதாக இருப்பதே காரணமாகும். அவை வரலாற்று உண்மைகள், கோட்பாடுகள், தார்மீக கடமைகள், இரட்சிப்பு மற்றும் கடைசி கால இயல் போன்ற விஷயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அம்சங்களைக்

கொண்டுள்ளன. வேதாகமத்தின் ஒவ்வொரு வசனமும் நமது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களுக்கான தார்மீக தாக்கங்களை தெரிவிக்கிறது. ஒவ்வொரு வேத பகுதியும் வரலாறு மற்றும் இரட்சிப்பைப் பற்றி நமக்கு எதையாவது கற்பிக்கிறது, மேலும் எதிர்காலத்தைப் பற்றிய நமது நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் உருவாக்க உதவுகிறது. மேலும் ஒரு வேத பகுதி தெரிவிக்கும் இந்த விஷயங்கள் ஒவ்வொன்றும் ஒரு சுருக்கத்திற்கான அடிப்படையாக பயன்படுத்தப்படலாம்.

சொல்லப்போனால், வேதாகமத்தின் அர்த்தம் பன்முகத்தன்மை கொண்டதாக இருப்பதால், நாம் அதை பல வழிகளில் சுருக்கி, அதன் உண்மையான அர்த்தத்திற்கு உண்மையாக இருக்க முடியும். வேதாகமத்தின் சிக்கலான தன்மை, நம்முடைய சுருக்கங்கள் ஒருபோதும் முழுமையானதாக இருக்காது என்பதையும், நாம் எப்போதும் உண்மையான மற்றும் தனித்துவமான அதிக சுருக்கங்களை உருவாக்க முடியும் என்பதையும் குறிக்கிறது.

வேதாகமத்தின் ஒரு பகுதி உண்மையில் மற்றொன்றைச் சுருக்கமாகக் கூறும் சில இடங்களைப் பார்ப்பதன் மூலம் இந்த காரியத்தை ஆராய்வோம். சங்கீதம் 110:1-ல் உள்ள இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" என்றார் (சங் 110:1).

புதிய ஏற்பாடு அடிக்கடி சங்கீதம் 110:1 ஐ மேற்கோள் காட்டுகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் அது அசல் அர்த்தத்தின் வேறுபட்ட அம்சத்தில் கவனம் செலுத்துகிறது. சங்கீதத்தின் மூல அர்த்தத்தைப் பற்றி மற்ற வசனங்கள் கூறும் அனைத்தும் மேற்கோள்களில் இல்லை.

உதாரணமாக, மேசியா வெறுமனே தாவீதின் குமாரனாக இருக்க வேண்டும் என்பதைக் காட்ட இயேசு அதை லூக்கா 20:41-44 இல் மேற்கோள் காட்டினார்.

அப்போஸ்தலர் 2:32-36 இல் பரலோக சிங்காசனத்தில் ஏறிய தாவீதின் வாரிசாக இருந்ததால் இயேசு கர்த்தரும் கிறிஸ்துவும் என்பதை நிரூபிக்க பேதுரு இதைப் பயன்படுத்தினார்.

சங்கீதம் 110:1-ன் வார்த்தைகள் தாவீதின் ஆண்டவரிடம் சொல்லப்பட்டவை என்பதையும் புதிய ஏற்பாடு அங்கீகரிக்கிறது; ஆகையால், பல புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் சங்கீதம் 110-ஐ பூமியில் கிறிஸ்துவின் ஆட்சியைக் குறிக்கப் பயன்படுத்துகின்றன. எபேசியர் 1:20-22, 1 கொரிந்தியர் 15:25 மற்றும் எபிரெயர் 10:13 ஆகிய வசனங்கள் அனைத்தும் சங்கீதத்தின் அசல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அர்த்தத்தின் இந்த அம்சத்தை அவர் திரும்பி வரும் வரை கிறிஸ்துவின் தற்போதைய ஆட்சியைக் குறிப்பிட்டு சுருக்கமாகக் கூறுகின்றன. எபிரெயர் 1:13 தேவதூதர்களின் ஊழியத்தை விட இயேசுவின் அதிகாரம் உயர்ந்தது என்பதை நிரூபிக்க இதைப் பயன்படுத்துகிறது.

சங்கீதம் 110:1 பற்றிய இந்த புதிய ஏற்பாட்டு குறிப்புகள் ஒவ்வொன்றும் சங்கீதத்தின் அசல் அர்த்தத்திற்கு உண்மையாக உள்ளன. ஆனால் ஒவ்வொன்றும் அந்த அசல் அர்த்தத்தின் முழுமையற்ற சுருக்கமாகும், மேலும் அவை ஒரு தனித்துவமான அழுத்தத்தைக் கொண்டுள்ளன. வசனத்தின் சிக்கலான, பன்முக மூல அர்த்தத்தால் இது சாத்தியமாகிறது.

> புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் யூத வியாக்கியான மரபுகளில் முந்தைய வேத பகுதியைப் பயன்படுத்துவதில் மிகவும் பொதுவான வழிகளில் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்துகின்றனர். சிலர் இதை மிட்ராஷிக் நுட்பங்கள் என்று அழைக்கிறார்கள். குழப்பமான பொதுவான பகுதிகளில் ஒன்று மத்தேயுவின் சுவிசேஷத்தில் உள்ளது, மேலும் மத்தேயுவில் "அது நிறைவேறிவிட்டது…" என்கிற நிறைவேற்றத்தின் சூத்திரம் இருக்கிறது என்று கூறியுள்ளனர். மத்தேயு 2-ல், கிறிஸ்துவும் அவருடைய குடும்பத்தாரும் எகிப்துக்குத் தப்பிச் சென்று, எகிப்திலிருந்து திரும்பி வரும்போது, மத்தேயு ஓசியாவிலிருந்து மேற்கோள் காட்டி, "எகிப்திலிருந்து என் குமாரனை அழைத்தேன்" என்று கூறுகிறார். பல சமயங்களில், வேத உரையாசிரியர்கள் அந்த வசனத்தை மேற்கோள் காட்டி, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஓசியா அந்த வார்த்தைகளை எழுதியபோது அவர் முதலில் அர்த்தப்படுத்தியவற்றுடன் இது எந்த வகையில் ஒத்துப்போக முடியும்? என்றனர். குறிப்பாக மத்தேயுவின் முதல் நான்கு அதிகாரங்களைப் பார்த்தால், இயேசு உண்மையில் இஸ்ரவேலை எவ்வாறு உருவகப்படுத்துகிறார் என்பதை மத்தேயு காட்டுகிறார் என்பதைக் காண்கிறோம். அவர் சிறந்த இஸ்ரவேலர்; அவர் தேவனுடைய இலட்சிய குமாரன் ஆவார். யாத்திராகமத்தில் நாம் வாசிக்கிறபடி இஸ்ரவேலர் "என் குமாரன்" என்று அழைக்கப்பட்டதைப் போலவே, இயேசு வனாந்தரத்திற்குச் சென்று, அவர் சோதிக்கப்பட்டு, அவர் அந்த சோதனையிலிருந்து தப்பித்து, குமாரத்துவ சோதனையில் தேர்ச்சி பெறுகிறார். ஆனால் அதற்கு முன்பாக 2-ம் அதிகாரத்தில் அவரும் அவருடைய குடும்பத்தாரும் எகிப்துக்குத் தப்பிச் சென்று எகிப்திலிருந்து வெளியே வரும்போது இஸ்ரவேலர் முழுவதையும்

பிரதிநிதித்துவப்படுத்துகிறார். வேதாகம ஆசிரியர்கள் வகை முறை என்று அழைக்கும் கருத்து இதுதான்: அவர் ஒரு மாதிரியை நிறைவேற்றுகிறார், இஸ்ர**வே**ல் எகிப்திலிருந்து வந்தது போல, அவர் எகிப்திலிருந்து வெளியே வருகிறார், அவர் இஸ்ர**வே**லை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்பதை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக மத்தேயுவின் முதல் நான்கு அதிகாரங்களில் கிறிஸ்துவை சித்தரிக்கும் மற்ற பகுதிகளைப் பார்க்கும்போது, அவர் தேவனுடைய குமாரன், அவர் தாவீதின் குமாரன் மற்றும் அவர் சிறந்த இஸ்ரவேலர் என்பது தெளிவாகப் புரிகிறது.

– Dr. – Dr.கிரெக் பெர்ரி

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டு இலக்கியத்தைப் பயன்படுத்தும் விதத்தைப் பார்க்கும்போது மக்கள் பெரும்பாலும் கவலையடைகிறார்கள், ஏனென்றால் பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களான அவர்கள் அதை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதற்கு ஏற்ப நீங்கள் அதை மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை நாம் குறிப்பாக வேத கல்லூரிகளில் அடிக்கடி கற்பிக்கிறோம். முதலில், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டை மூன்று வெவ்வேறு வழிகளில் பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்: சில நேரங்களில் அவர்கள் அதை நேரடியாக மேற்கோள் காட்டுகிறார்கள், அவர்கள் அவ்வாறு செய்யும்போது, அவர்கள் அதை நாம் விரும்பும் வழிகளுக்கு மிக நெருக்கமாக வியாக்கியானம் செய்கிறார்கள். மற்ற நேரங்களில், அவர்கள் பழைய ஏற்பாடு கூறும் ஒன்றை வெறுமனே சுட்டிக்காட்டும் ஒரு குறியீடாக இதைப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் உண்மையில் அதை வியாக்கியானம் செய்யவில்லை; அவர்கள் வெறுமனே ஒரு சிந்தனையை எடுக்கிறார்கள். மூன்றாவது வழி என்னவென்றால் அதை அவர்கள் உதாரணத்திற்காக பயன்படுத்துகிறார்கள் என்பதாகும். அவர்கள் கூறும் ஒரு கருத்தை விளக்க, அவர்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒன்றை உவமையாக எடுக்கிறார்கள், மேலும் அவர்கள் உண்மையில் அதன் அமைப்பைப் பற்றியோ அல்லது அதன் வகையைப் பற்றியோ கவலைப்படவில்லை, அவர்கள் அதை உதாரணத்திற்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள். புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பயன்பாடும் ஒரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நேரடி வியாக்கியான மேற்கோளாக நோக்கம் கொண்டது என்று நாம் கருதினால், பழைய ஏற்பாட்டின் பல பயன்பாடுகள் குறிப்புகளாகவோ எடுத்துக்காட்டுகளாகவோ இருப்பதால் நமக்கு சிக்கல் ஏற்படப் போகிறது. அதைப் புரிந்துகொண்டு, இதுபோன்ற வேறுபாடுகளை உருவாக்கினால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பிரச்சனைகள் மறைந்துவிடும் என்று நான் நினைக்கிறேன்.
>
> – Dr. ஜான் ஆஸ்வால்ட்

சொல்லப்போனால், வேதாகமத்தின் ஒவ்வொரு வேத பகுதிக்கும் இது பொருந்தும். ஒவ்வொரு வேத பகுதியும் பல நியாயமான சுருக்கங்களுக்கு வழிவகுக்கிறது. நமக்கு மிகவும் மதிப்புமிக்க சுருக்கங்கள் இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம், நபருக்கு நபர் மாறுபடும். வேதாகமத்தின் ஒவ்வொரு சுருக்கமும் சமமாக மதிப்புமிக்கதாகவோ அல்லது நியாயமானதாகவோ இல்லை. ஆனால் வேதப் பகுதிகளின் அசல் அர்த்தத்தின் பல சுருக்கங்கள் உள்ளன, அவை ஒவ்வொரு யுகத்திலும் திருச்சபைக்கு உண்மையாகவும் பயனுள்ளதாகவும் இருக்கின்றன.

வேத பகுதியின் சிக்கலான தன்மை எவ்வாறு பல சுருக்கங்களுக்கு நம்மை இட்டுச்செல்லும் என்பதை நாம் பார்த்தோம், இப்போது வியாக்கியான அறிஞரின் தனித்துவத்திற்கு நம் கவனத்தைத் திருப்புவோம்.

## வியாக்கியான அறிஞரின் தனித்துவம்

முந்தைய பாடத்தில், வேதாகமத்தின் அர்த்தத்திற்கு அதிகார-உரையாடல் அணுகுமுறையைப் பயன்படுத்துவதை நாம் பரிந்துரைத்தோம். வழிமுறைகள் வேதாகம நியமங்களுக்கு இணங்கும் வரை வேத பகுதியில் புறநிலை உண்மையைக் காணலாம் என்பதை அதிகார-உரையாடல் மாதிரி ஒப்புக்கொள்கிறது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளலாம். அதிகார-உரையாடல் மாதிரியின் ஒரு மதிப்புமிக்க அம்சம் என்னவென்றால், அனைத்து வியாக்கியான அறிஞர்களும் வெவ்வேறு வகையான கவலைகள், அனுமானங்கள், பின்னணிகள் மற்றும் கேள்விகளுடன் வேத பகுதிக்கு வருகிறார்கள் என்ற உண்மையை இது எடுத்துக்காட்டுகிறது. நாம் ஒவ்வொருவரும் வேதாகமத்தை வித்தியாசமாக வாசிக்கிறோம், ஏனென்றால் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாக வரங்களை அளித்துள்ளார். நம் அனைவருக்கும் பலங்கள் மற்றும் பலவீனங்கள் உள்ளன, மேலும் நமது தனித்துவமான அறிவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தகவல்களை பல்வேறு வழிகளில் செயலாக்குகிறோம். நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களின் பலத்திலிருந்து பயனடையும்படி தேவன் தனது சபையை வடிவமைத்துள்ளார்.

மக்களுடைய ஆவிக்குரிய வரங்கள் மற்றும் பின்னணிகள் வேத பகுதிகளை தனித்துவமான வழிகளில் தொகுக்க வழிவகுக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு வரலாற்றாசிரியர் ஆதியாகமம் 1 இன் அர்த்தத்தை ஒரு கலைஞனை விட வித்தியாசமாக சுருக்கலாம். ஒளியையும் இருளையும், நீரையும் வறண்ட நிலத்தையும், தாவரங்களையும் விலங்குகளையும் தேவன் எந்த வரிசையில் படைத்தார் என்பதை வரலாற்றாசிரியர் விவரிக்கலாம். ஆனால் ஒரு கலைஞன் இரவு வானத்தில் உள்ள நட்சத்திரங்களின் அழகையும் நற்குணத்தையும் பற்றியும், உலகெங்கிலும் உள்ள மீன்கள் மற்றும் பறவைகளைப் பற்றியும் பேசலாம். வியாக்கியான அறிஞர்களின் தனிப்பட்ட பலங்கள் ஒவ்வொன்றும் வேத பகுதியின் அசல் அர்த்தத்தின் முக்கியமான ஆனால் வெவ்வேறு அம்சங்களை வெளிக்கொணர வழிவகுக்கின்றன.

அதே நேரத்தில், இரண்டு வகையான சுருக்கங்களும் வியாக்கியான அறிஞர்களின் பலவீனங்களால் தடுக்கப்படலாம்; ஒவ்வொருவரும் மற்றவர் உள்ளடக்கிய முக்கியமான உண்மைகளைத் தவிர்க்கின்றனர். எடுத்துக்காட்டாக, நாம் தேவனுடைய இயல்பைப் புரிந்துகொள்ள விரும்புகிறோம் என்று வைத்துக்கொள்வோம், ஆதியாகமம் 1 ஐ ஆராய்வதன் மூலம் தொடங்குகிறோம். வரலாற்றாசிரியரின் சுருக்கத்தைப் படித்தால், தேவன் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமிடுபவர் என்பதைக் காண்கிறோம், ஆனால் ஆதியாகமம் 1:31 இல் சிருஷ்டிப்பு "மிகவும் நல்லது" என்று தேவன் அறிவித்தபோது தேவன் தனது சிருஷ்டிப்பில் அடைந்த மகிழ்ச்சியை நாம் பார்க்காமல் இருந்து விடுவோம். இருப்பினும், கலைஞரின் சுருக்கத்தில் மட்டுமே நாம் கவனம் செலுத்தினால், தேவனை குறைபாடற்ற சிருஷ்டிகராகக் காணலாம், ஆனால் அவரது உள்நோக்கத்தையும் ஒழுங்கையும் புறக்கணிக்கலாம். இந்த சாத்தியமான பலவீனங்கள் எந்த சுருக்கத்தையும் புறக்கணிக்கக்கூடாது என்பதைக் காண உதவுகின்றன, ஏனெனில் அது நம்முடையதைப் போன்றது அல்ல. பல சந்தர்ப்பங்களில், மற்றவர்களின் சுருக்கங்களிலிருந்து ஒரு பகுதியைப் பற்றி நாம் நிறைய கற்றுக்கொள்ளலாம்.

> கிறிஸ்துவின் சரீரமாகிய நம் அனைவருக்கும் பலங்களும் பலவீனங்களும் இருப்பதால், நாம் வெறுமனே வேதாகமத்தைப் படிக்காமல், வேதாகமத்தில் மற்றவர்கள் கண்டவற்றிலிருந்து கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும். இதற்குப் பல உதாரணங்களைச் சொல்ல முடியும். நான் புதிய ஏற்பாட்டில் நிறைய ஆய்வு செய்துள்ளேன். நான் பழைய ஏற்பாட்டைப் படித்து இருக்கிறேன், பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் ஒற்றுமையையும், பழைய ஏற்பாடானது கிறிஸ்துவில் அவரது திருச்சபையில் நிறைவேற்றுவதையும் கண்டிருக்கிறேன், ஆனால் பழைய ஏற்பாட்டு வேத



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பகுதிகளில் தங்கள் எண்ணங்களையும் கவனத்தையும் குவித்து, எபிரெய உரையைப் புரிந்துகொள்வதிலும் பண்டைய கிழக்கத்திய பின்னணிகளைப் புரிந்து கொள்வதிலும் ஞானத்தைக் கொண்டு வரக்கூடிய என் நண்பர்களிடமிருந்து நான் பெரிதும் பயனடைகிறேன். பழைய ஏற்பாட்டில் இருந்து வரும் புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்படக்கூடிய ஒரு உரையைப் பார்க்கும்போது, அதன் அசல் அமைப்பையும் புரிந்து கொண்டு நான் பயனடைகிறேன். கல்வியின்மை காரணமாக மட்டுமல்ல, நான் இன்னும் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக முழுவதுமாக மாறவில்லை என்பதால், தெளிவாக வேத பகுதியை புரிந்து கொள்வதில் எனக்கும் குறைபாடு இருப்பதையும் நான் அறிவேன். கிறிஸ்துவோடு நெடுங்காலம் நடந்தவர்களின் ஞானத்திலிருந்து நான் கற்றுக்கொள்கிறேன். வேதத்தில் விஷயங்களைக் காண்கிறார்கள். நான் முழுமையாக அடையாளம் காணாத வழிகளில் அது என் வாழ்க்கைக்கும் அவர்களின் வாழ்க்கைக்கும் எவ்வாறு பொருந்தும் என்பதற்கான தாக்கங்களை அவர்கள் பார்க்கிறார்கள். ஆகவே, என் ஆவிக்குரிய முதிர்ச்சியின்மையின் காரணமாக, கிறிஸ்துவுடன் மேலும் நடந்து வந்த சகோதர சகோதரிகளிடமிருந்து நான் பெரிதும் பயனடைகிறேன்.

– Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

வேதம் மற்றும் வேத வியாக்கியானமானது மற்ற விசுவாசிகளுடனான ஐக்கியத்தின் பின்னணியில் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் கிட்டத்தட்ட அறுபத்தைந்து முறை நமக்குக் கிடைக்கும் அறிவுறுத்தல்களில் ஒன்று ”ஒருவருக்கொருவர்” என்ற எளிய சொற்றொடராகும். ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துங்கள், ஒருவரையொருவர் கட்டியெழுப்புங்கள் மற்றும் ஒருவரையொருவர் வழிநடத்துங்கள் என்பவை உதாரணங்களாகும். நாம் மற்ற விசுவாசிகளுடன் ஐக்கியமாக இருக்கும்போதுதான் கிறிஸ்துவின் அன்பின் அகலம், நீளம் மற்றும் ஆழம் என்ன என்பதை எல்லா பரிசுத்தவான்களுடனும் நாம் முழுமையாக புரிந்துகொள்கிறோம் என்று எபேசியர் 3:18-ல்

> அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். எனவே தனியாக நாம் அதை செய்ய முடியாது. நாம் மற்ற விசுவாசிகளுடன் ஐக்கியமாக அதைச் செய்ய வேண்டும். பின்னர் வழக்கமாக அவர்களும் அதை செய்வார்கள்... நான் ஒரு கலப்புக் குழுவில் அமர்ந்து வேத ஆய்வை செய்கிறேன் என்பதை நான் அனுபவித்திருக்கிறேன், மக்கள் வேதத்தை ஒன்றாக அமர்ந்து படிக்கும்போது ஒருவரையொருவர் எந்த வகையான நுண்ணறிவுகளுடன் வளப்படுத்துகிறார்கள் என்பது எப்போதும் ஆச்சரியமாக இருக்கிறது.
>
> – Dr. P. J. பைஸ்

வேத பகுதியின் சிக்கலான தன்மையும் வியாக்கியான அறிஞரின் தனித்துவமும் பல சுருக்கங்களை சாத்தியமாக்கும் வழிகளைப் பார்த்த பிறகு, வாசகர்களின் தேவைகளைக் கருத்தில் கொள்வோம்.

## வாசகர்களின் தேவைகள்

வேதாகமத்தின் அசல் அர்த்தத்தை நாம் சுருக்கமாகச் சொல்லும்போது, வெவ்வேறு வாசகர்களின் தேவைகளை எதிர்பார்க்கும் வழிகளில் நாம் அதை அடிக்கடி செய்கிறோம். சில நேரங்களில் பெரியவர்களுக்கு ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்க ஒரு வேத பகுதியை சுருக்கமாகக் கூறுகிறோம். சில நேரங்களில் நாம் குழந்தைகளுக்காக ஒரு வேத படிப்பைத் தயாரிக்கிறோம். நாம் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையுடன் மல்யுத்தம் செய்வதற்கோ நம்முடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவோ சில நேரங்களில் நாம் வேதாகமத்தைப் படிக்கிறோம். வெவ்வேறு வாசகர்கள் பெரும்பாலும் மிகவும் வேறுபட்ட தேவைகளைக் கொண்டுள்ளனர். இதன் பொருள் என்னவென்றால், வேதத்தை பொறுப்பான மற்றும் பொருத்தமான வழிகளில் பயன்படுத்துவதற்கு, நமது குறிப்பிட்ட வாசகர்களுக்கு உதவியாக இருக்கும் சுருக்கங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். உதாரணமாக, யோவான் 16:33-ல் இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள்! நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவான் 16:33).

இந்த வசனத்தை சுருக்கமாகச் சொல்ல பல நியாயமான வழிகள் உள்ளன. சமாதானத்தை மையமாகக் கொண்ட ஒரு சுருக்கத்தை நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உருவாக்கலாம், அல்லது இயேசு நமக்கு உண்மையை வெளிப்படுத்துகிறார் என்ற உண்மையை மையமாகக் கொண்டிருக்கலாம். ஆனால் துன்பத்தைக் கையாளும் வாசகர்களுக்காக நாம் அதை சுருக்கமாகக் கூற வேண்டும் என்று வைத்துக் கொள்வோம்.

முதலில், துன்பத்திற்கான காரணத்தை நாம் பார்க்க வேண்டும். சில கிறிஸ்தவர்கள் விசுவாசமற்ற அரசியல் அதிகாரிகளிடமிருந்து துன்புறுத்தலை அனுபவிப்பதால் பாதிக்கப்படுகிறார்கள். மற்றவர்கள் வறுமை அல்லது இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்படுகின்றனர். மற்றவர்கள் அறிவற்ற அல்லது பாவமான நடத்தையின் விளைவாக பாதிக்கப்படுகிறார்கள். துன்பத்திற்கு வேறு காரணங்களும் உள்ளன. நம்முடைய சொந்த அனுபவங்களில் உள்ள இந்த பரந்த வேறுபாடுகள் காரணமாக, எந்த ஒரு சுருக்கமும் யோவான் 16:33 இன் போதனைகளை இந்த வெவ்வேறு வாசகர்களுக்கு பொறுப்புடன் பொருத்தாது.

எடுத்துக்காட்டாக, துன்புறுத்தலுக்கு ஆளான ஒரு வாசகர்களுக்கான வேத பகுதியை சுருக்கமாகக் கூறுவது பின்வருமாறு தோன்றலாம்: இயேசு இறுதியில் உங்களுடைய உபத்திரவத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, நீங்கள் மீண்டும் துன்புறுத்தப்படாத ஒரு உலகத்தை ஸ்தாபிப்பார் என்பதால் உற்சாகமடையுங்கள்.

ஆனால் வறுமை அல்லது இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, சுருக்கம் பின்வருமாறு தோன்றலாம்: இயேசு உங்கள் துன்பத்தை சிறிது காலத்திற்கு அனுமதித்துள்ளார், இறுதியில் நீங்கள் அனுபவித்த இழப்புகளை ஈடு செய்ய அதிகமான வழிகளில் உங்களை ஆசீர்வதிப்பார்.

பொதுவாக, இயேசு உலகத்தை ஜெயித்தார் என்ற உண்மையால் நாம் அனைவரும் ஊக்குவிக்கப்படலாம், மேலும் நாம் அனைவரும் துன்பங்களுக்கு மத்தியில் சமாதானத்தைக் காணலாம் என்று நம்பலாம். ஆனால் நாம் அனைவரும் வெவ்வேறு சிக்கல்களால் பாதிக்கப்படுவதால், வெவ்வேறு வாசகர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஊழியம் செய்வதற்காக இந்த வேத பகுதியின் சிக்கலான போதனையை வெவ்வேறு வழிகளில் மாற்றியமைக்க வேண்டும்.

கலாச்சார வேறுபாடுகளையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கலாச்சாரமும் வெவ்வேறு வரலாறு, வெவ்வேறு சமூக அமைப்பு, வெவ்வேறு போட்டி மத கண்ணோட்டங்கள் மற்றும் வெவ்வேறு பலங்கள் மற்றும் பலவீனங்களைக் கொண்டுள்ளன. வேதத்தை மிகவும் பயனுள்ள வழிகளில் பயன்படுத்துவதற்கு, குறிப்பிட்ட நபர்களின் தேவைகளுக்கு அவர்களின் சொந்த சூழ்நிலைகளில் ஊழியம் செய்யும் வேதாகமத்தின் சுருக்கங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

போதக ஊழியத்தின் சிறப்புரிமைகளில் ஒன்று, வேதத்தைக் கற்பிப்பதும் நன்கு படித்தவர்கள், படிக்காதவர்கள், இளைஞர்கள், வயதானவர்கள், மிகவும் மாறுபட்ட வேலை சூழ்நிலைகளில் உள்ளவர்கள் போன்ற பலவிதமான வாசகர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதும் ஆகும். ஆனால் அது மிகவும் கடினமான பணியாகும், ஏனென்றால் ஒரு போதகர் உண்மையில் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்கும் மக்களைப் பற்றிய உணர்வைக் கொண்டிருக்க வேண்டும். அந்தப் பகுதியில் நான் மிகவும் உதவியாகக் கண்ட இரண்டு விஷயங்கள் உள்ளன; அவையாவன: முதலாவதாக, என் சபையில் உள்ளவர்களிடம், ”அது தெளிவாக இருந்ததா? அது உங்களுக்குப் புரிகிறதா? என்னிடம் பேசுங்கள் என்பது. பின்னர், சமீபத்திய பிரசங்கங்களிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?” என்று கேட்பது. எல்லா நேரங்களிலும் மக்களுடன் பேசுவது மட்டுமல்லாமல், தேவனுடைய வார்த்தைக்கு பதிலளிக்கும் விதமாக மக்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். எனக்கு மிகவும் உதவியாக இருந்த மற்றொரு விஷயம், சிறு குழந்தைகளுக்கு தவறாமல் சுவிசேஷத்தை கற்பிப்பது. உண்மையில், போதக ஊழியத்தில் பல நேரங்களில் நான் ஒரு முதிர்ச்சியான சபைக்கு கற்பிக்கும் அதே பிரசங்கத்தை சிறு குழந்தைகளுக்கு குறுகிய, எளிமையான வடிவத்தில் கற்பித்திருக்கிறேன், மேலும் இது ஒரு போதகருக்கு எளிமையின் வரத்தை வளர்ப்பதற்கான ஒரு சிறந்த வழியாகும். சுவிசேஷத்தைப் போன்ற முக்கியமான ஒன்றை நாம் பேசும்போது நாம் எப்போதும் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்க முயற்சிக்க வேண்டும்.

– Dr. பிலிப் ரைகென்

நமது செய்தியை மக்கள் கேட்கும் வகையில் மாற்றியமைப்பது மிகவும் முக்கியம். வலது மற்றும் இடது மூளை கொண்டவர்களாக இருப்பது இதைச் செய்வதற்கான வழிகளில் ஒன்றாகும். இடது பக்க மூளைக்காரர்கள் மிகவும் பகுப்பாய்வு செய்பவர்களாகவும், உண்மைகளைக் கையாள விரும்புகிறவர்களாகவும் இருப்பார்கள். கதைகளுக்கும் செயல்விளக்கங்களுக்கும் எடுத்துக்காட்டுகளுக்கும் வலதுபக்க மூளைக்காரர்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். நான் அந்த விஷயங்களுக்கு நடுவில் இருக்க



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> முனைகிறேன், எனவே எனக்கு அவை இரண்டும் தேவை. இது நீங்கள் செல்லும் கலாச்சாரத்தைப் பொறுத்தது, ஏனென்றால் உலகில் சில இடங்களில் வலது பக்க மூளைக்காரர்கள் இருக்கிறார்கள், சிலர் இடதுபக்க மூளைக் காரர்களாக இருக்கிறார்கள், அந்த இடங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்வது நல்லது. இயேசுவின் காலத்தில், மற்ற வேதங்கள், பிற அனுபவங்கள் போன்றவற்றுடன் வேதாகம சத்தியத்தின் தொடர்புகளைத் தேட அவர் தயாராக இருந்தார் என்பது மிகவும் சுவாரஸ்யமானது: உதாரணமாக வானத்தின் பறவைகளைப் பாருங்கள், சாலையில் செல்லும் ஒரு சமாரியனைப் பற்றிய கதை போன்ற இயேசு கூறிய கதைகள். எந்நேரமும் அதைச் செய்தார்... வலது மற்றும் இடது மூளை கொண்டவராக அவர் பல்வேறு வாசகர்களுக்கு மிகவும் நன்றாக பொருந்தினார் என்று நான் நினைக்கிறேன்.
>
> – Dr. மேட் பிரைட்மேன்

வேதத்தை நாம் வியாக்கியானம் செய்யும்போது, அந்த வேத பகுதியின் அர்த்தத்தையும் நமது சமகால வாசகர்களின் தேவைகளையும் மனதில் கொள்ள வேண்டும். பல வழிகளில், வேதாகமத்தின் ஆய்வு என்பது மூல அர்த்தத்திற்கும் நமது சமகால வாசகர்களுக்கும் இடையிலான தூரத்தைக் குறைப்பதாகும், இதனால் நாம் அனைவரும் வேத பகுதிகளிலிருந்து முழுமையாக பயனடைய முடியும். நம்மில் எவராலும் இதை சரியாக செய்ய முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் தனது திருச்சபைக்கு மதிப்புமிக்க வழிகளில் ஊழியம் செய்யும் வேதாகம சுருக்கங்களை அறிய நம்மை வழிநடத்துவார் என்று நாம் நம்பலாம்.

# முடிவுரை

அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கான இந்த பாடத்தில் வேதாகமத்தின் எழுத்தாளர், ஆவணம் மற்றும் வாசகர்களில் நாம் காணும் அர்த்தத்திற்கான முக்கியமான வழிகாட்டிகள்; மற்றும் வேதாகமத்தில் நாம் செய்யக்கூடிய பல சுருக்கங்கள் ஆகிய இரண்டு முக்கிய யோசனைகளில் நாம் கவனம் செலுத்தினோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சில நேரங்களில் வேதவாக்கியங்களைப் புரிந்துகொள்வது கடினம் என்பதை நாம் அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் நற்செய்தி என்னவென்றால், தேவன் தம்முடைய வார்த்தையின் அசல் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க பல்வேறு வழிகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். வேதாகமத்தின் ஆவணங்களையே அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார், இந்த ஆவணங்களில் நமக்குத் தேவையான இலக்கண, இலக்கியப் பின்னணி இருக்கிறது. மேலும் வேதாகமத்தின் எழுத்தாளர்கள் மற்றும் அசல் வாசகர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கான வழிகளையும் அவர் நமக்கு வழங்கியுள்ளார். இதற்கும் அப்பால், வேதாகமத்தின் ஒவ்வொரு பகுதியின் அசல் அர்த்தமும் மிகவும் வளமானது, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் அதைப் பற்றிய புதிய நுண்ணறிவுகளை பெற முடியும். நாம் வேதத்தைப் படிக்கும்போது இந்த விஷயங்களை மனதில் வைத்திருந்தால், வேதாகமத்தின் அசல் அர்த்தத்தைப் பற்றி மேலும் மேலும் அறிய முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.